1992 ஏப்ரல் 21]

முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் யாருமே எண்ணிப்பார்க்காத அளவுக்கு நெடுஞ்சாலைத் துறையில் இன்றைக்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலே பல்வேறு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று தமிழகத்தில் ஒரு வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிற முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், நீங்கள் குறிப்பிடுவதைப் போல ரப்பர் ரோடு போடுகின்ற அளவுக்கு இந்திய நாட்டிலே வருமானம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொள்வார்கள் என்று நான் கருதுகின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 579. திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

579—

மானாமதுரை தொகுதியில் வைகையாற்றில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

*1459— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை தொகுதியில் வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் பழையனூர், மாரநாடு, கீழ்ப்பசலை ஆகிய கால்வாய்கள் மேடாக இருப்பதால், வைகை ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வைகைக் கால்வாய்களின் முகப்புகளில் தலை மதகுகள் கட்டி தண்ணீர் கால்வாய்களில் செல்லத்தக்க வகையில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கும், கால்வாய்களைச் சீரமைப்பதற்கும் ஏறத்தாழ 50½ இலட்சம் ரூபாய் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. 1992-93 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின் கீழ் அதாவது 'பார்ட் ஸ்கீம்' என்று சொல்லப்படும் அந்தத்

திட்டத்தில் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கான 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு தொகை ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த ஒதுக்கீட்டுத் தொகை 10 இலட்சம் என்பது போதாது என்ற காரணத்தால் அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தொகையை உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 50½ இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆகவே வரும் ஆண்டுகளில் இதற்கான நிதியாதாரத்தை அதிகமாகப்பெருக்கி விரைவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 580. திரு. பி. வி. இராஜேந்திரன். இருக்கையில் இல்லை. @

வினா எண் 581. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

581—

என். ஆர். இ. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு.

திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் 1988–89 முதல் 1990–91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) இல்லையெனில் எப்போது மின் இணைப்பு அளிக்கும் பணி முழுமையடையும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நத்தம் தொகுதியில் 1988-89 முதல் 1990-91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின்னிணைப்பு கோரி வந்த விண்ணப்பங்கள் 1415. இதில் 1990-91 முடிய 910 விண்ணப்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுவிட்டன.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 28-4-1992 ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பெற்றது.